யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

FWC

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2016

## Term Examination, March - 2016

| தரம் :- 13 (2016) | சித்திரக்கலை – I | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

சுட்டெண் : .................................

அறிவுறுத்தல்கள் :

❖ இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.

பகுதி - I

➤ எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடையளிக்குக.

➤ ஒவ்வொரு வினாவுக்குமுரிய சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் இலக்கத்தை எதிரே உள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

பகுதி - II

➤ மூன்று உப பகுதிகளைக் கொண்டது.

➤ ஒரு உப பகுதியிலிருந்து ஒரு வினா வீதம் தெரிவு செய்து, மூன்று வினாக்களுக்கு விடை எழுதுக.

❖ பகுதி I, பகுதி II, ஆகியவற்றின் விடைத்தாள்களை ஒன்றாக இணைத்துக் கையளிக்குக.


| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| வினாத்தாள் I | |
| பகுதி | புள்ளி |
| I | |
| II | |
| மொத்தம் | |

## பகுதி - I

❖ 01 தொடக்கம் 05 வரையான வினாவுக்களுக்கு மிகப் பொருத்தமான விடையை A, B, C, D, E எனப் பெயரிடப்பட்டுள்ள பின்வரும் செதுக்கல்களின் படங்களிலிருந்து தெரிவு செய்க.


A


B


C


D


E

01) எழுத்து *A* இன் மூலம் காட்டியுள்ள இராணி மாளிகை எனவும் அறியப்படும் மகாசென் மாளிகையின் சந்திரவட்டக்கல்

(1) சிறுபுடைப்புச் செதுக்கல்களில் ஒன்று
(2) பிராணிகளின் உருவங்கள் உள்ளடக்கி செதுக்கப்பட்ட செதுக்கல்
(3) சலனம், ரிதம், மென்மையான பூரணப்பாட்டைக் கொண்ட செதுக்கல்
(4) அரைவட்டக் கருங்கல் தகட்டுச் செதுக்கல்
(5) கற்சிற்பியின் சிறப்பான நிர்மாணிப்பு (.......)

02) *B* எழுத்தால் காட்டப்படும் பெண் செதுக்கல்

(1) பாரூத் கல்வேலித் தூணில் உள்ள இயக்கி வடிவம்
(2) அமராவதி கல்வேலித் தூணிலுள்ள இராட்சதி வடிவம்
(3) சாஞ்சி தோரணத்திலுள்ள இயக்கியின் வடிவம்
(4) சாலபஞ்சிகா என்னும் பெயரால் இனங்காணப்படும் இயக்கியின் வடிவம்
(5) சகல சௌபாக்கியங்களையும் குறியீடாகக் கொண்ட தேவதையின் வடிவம் (.......)





Scanned with CamScanner

03) *C* எழுத்தால் காட்டப்படும் படக்குறிப்பில் சித்தரிக்கப்படுவது
(1) புதிய எகிப்திய மரபுக்கமைய செதுக்கப்பட்ட செதுக்கல்
(2) பேரோ ஒருவரை வெளிக்காட்டுகின்ற மரபுரீதியான செதுக்கல்
(3) கப்றே என்னும் பெயரில் இனங்காணப்படும் செதுக்கல்
(4) கெசிறா என்னும் பெயரால் இனங்காணப்படும் செதுக்கல்
(5) பூஜைக்கு ஆயத்தமாகும் பேரோ ஒருவரைக் காட்டும் செதுக்கல் (.......)

04) எழுத்து *D* இனால் காட்டப்படும் றஜன் தூண் செதுக்கல்
(1) உரோமில் இருந்த செதுக்கல் கலை பற்றி செய்கின்ற விவரணம்.
(2) குறுக்கு நிரைகள் வேறுவேறாகப் பிரித்து நிர்மாணிக்கப்பட்ட செதுக்கல் தொகுதிகளின் இணைப்பு.
(3) மாகஸ் ஒறுளியஸ் தூண்போல் நிர்மாணிக்கப்பட்டது.
(4) சக்கரவர்த்தியின் யுத்த வெற்றிச் செய்திகளை உள்ளடக்கிச் செய்யப்பட்டது.
(5) அரச பரம்பரைச் செய்திகளை உள்ளடக்கிச் செய்யப்பட்டது. (.......)

05) *E* எழுத்தினால் காட்டப்பட்டுள்ள பாரதத்தின் காந்தார தேசத்தில் கண்டெடுக்கப்பட்ட புத்தர் சிலை,
(1) தக்திபஹி புத்தர் சிலையாகும்.
(2) துஸ்தரக்கிரியாவ புத்தசிலையாகும்.
(3) சஹ்றி பகலொல் புத்தர் சிலையாகும்.
(4) பிரெகம் புத்தர் சிலையாகும்.
(5) கிரேக்க கிறிஸ்துதேவ புத்தர் சிலையாகும். (.......)

06) பொலன்னறுவை கல்விகாரையில் உள்ள புத்த சிலையில் அமைந்துள்ள காவி உடையில் காணப்படும் மடிப்புகளை ஒத்த கோட்டு உருவமைப்பைக் கீழே காட்டப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவு செய்க.

(1)  (2)  (3)  (4)  (5) 

agaram.lk

(.......)

07) பூமிஸ்பரிச முத்திரையைக் காட்டுகின்ற சிலைகளில் சித்திரிக்கப்படுவது
(1) புத்தர் பெருமான் சமாதி நிலையில் அமர்ந்து இருக்கும் சந்தர்ப்பம்
(2) புத்தர் பெருமான் மகா கருணை சமாதி நிலையைப் பெறும் சந்தர்ப்பம்
(3) சித்தார்த்தர் புத்தர் நிலையை அடைந்த சந்தர்ப்பம்
(4) புத்தர் பஸ்வக தபவிகளுக்கு தர்ம உபதேசம் செய்த சந்தர்ப்பம்
(5) பரிநிர்வாண நிலையைக் காட்டும் சந்தர்ப்பம் (.......)

08) பொலன்னறுவை திவங்க விமசர்களின் சிறந்த பாராட்டுக்குரியதாய் அமைவது
(1) இந்து சமய கட்டடக்கலை நுட்பத்துக்கமைய நிர்மாணிக்கப்பட்டுள்ளமையினால் ஆகும்.
(2) கோளவடிவ சிகர அமைப்பில் (கிஞ்ஜிகாவசத முறைப்படி) கூரை அமைக்கப்பட்டிருப்பதனால் ஆகும்.
(3) பொலன்னறுவைக் காலத்தில் பல சித்திரக்கலை ஆக்கங்கள் கிடைக்கப்பெறும் கலைக்கூடம் என்பதனால் ஆகும்.
(4) பராக்கிரமபாகு மன்னனால் கட்டப்பட்ட விகாரை என்பதனால் ஆகும்.
(5) இன்று ஓரளவு முழுமையாக காணப்படும் கட்டடமாகும். (.......)




Scanned with CamScanner

09) சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்ட நடனப் பெண் சிற்ப ஊடகக் கையாளுதல் மூலம்
(1) இயற்கைப் பண்பை வெளிக்காட்டுகிறது.
(2) பாணியுடன் கூடிய இயல்பை வெளிக்காட்டுகிறது.
(3) நடன இயல்பை வெளிக்காட்டுகிறது.
(4) குறியீட்டு வெளிப்பாட்டைக் கொண்ட இந்து தெய்வத்தை சித்திரிக்கின்றது.
(5) சிந்துவெளி நாகரீக மக்களிடத்து காணப்பட்ட வார்ப்பு சிற்பம் அமைத்தல் திறனை வெளிப்படுத்துகின்ற ஒன்றாகும். (.......)


10) ஆய்வாளரான கலாநிதி பரணவிதான அவர்களின் சிலை வைக்கப்பட்டுள்ள இடம்
(1) சிகிரியாவின் அரும்பொருள் காட்சியகத்திலாகும்.
(2) தேசிய அரும்பொருள் காட்சியகத்திலாகும்.
(3) தேசிய கலாபவனத்திலாகும்.
(4) தொல்பொருள் திணைக்களத்திலாகும்.
(5) அழகியல் பல்கலைக்கழகத்திலாகும். (.......)

11) இங்கு காட்டப்பட்டுள்ள வில் வளைவு




(1) உரோமர்கள் தமது கட்டடக்கலை நிர்மாணிப்புகளின் பெருமையை உலகுக்கு எடுத்துக் காட்டுவதற்காக மேற் கொண்ட நிர்மாணிப்பாகும்.
(2) உரோம சிற்பக்கலையின் பெருமையை எடுத்துக் காட்டு வதற்காக நிர்மாணிக்கப்பட்ட வில் வளைவாகும்.
(3) உரோமப் பேரரசனொருவனின் யுத்த வெற்றிக் குறிப்புகளை உள்ளடக்கிய செதுக்கல்களைக் கொண்ட வீதிக்குக் குறுக்காகக் கட்டப்பட்ட வில் வளைவாகும்.
(4) உரோமாபுரியில் ஒரு மாகாணத்திலிருந்து இன்னொரு மாகாணத்துக்குச் செல்வதற்கான நுழைவாயிலாகக் கட்டப்பட்டதாகும்.
(5) உரோமப் பேரரசர்களால் தமது நகரங்களை அலங்கரிப்பதற்காகக் கட்டப்பட்டதாகும். (.......)

12) இங்கு காணப்படும் கட்டடக்கலை நிர்மாணிப்பு



(1) பொலன்னறுவையின் புராதன கட்டடங்களிடையே ஏழு மாடிகளுடன் கூடிய கூம்பக வடிவுடைய மாளிகையாகும்.
(2) பொலன்னறுவை தலதா பிரகாரத்தில் அமைந்துள்ள ஏழு மாடிகளுடன் கூடிய ஸ்தூபி நிர்மாணிப்பாகும்.
(3) ஒன்றுக்கொன்று சிறிதாக அமையுமாறு ஏழு மாடிகளைக் கொண்ட பொலன்னறுவையில் கட்டப்பட்ட சமய நினைவுச் சின்னமாகும்.
(4) பொலன்னறுவை தலதாப் பிரகாரத்தில் அமைந்துள்ள இந்து சமய வழிபாட்டுத் தலமாகும்.
(5) அநுராதபுரத்தில் இருந்து பொலன்னறுவைக்குப் பரவலடைந்த கட்டடக்கலையின் ஓர் அங்கமாகும். (.......)

13) இலங்கையின் வட்டதாகேயான இது



(1) இலங்கையின் வட்டதாகே மனைகளுள் அலங்காரமான வட்டதாகே ஆகும்.
(2) நிஸ்சங்கமல்ல மன்னனால் புனரமைக்கப்பட்ட பொலன்னறுவையின் வட்டதாகே ஆகும்.
(3) மெதிரிகிரிய கிராமத்தில் நிர்மாணிக்கப்பட்ட வட்டதாகே ஆகும்.
(4) வட்ட வடிவான கலை நுட்பம் நிறைந்த மேடையின் மீது அமைக்கப்பட்ட ஒரேயொரு வட்டதாகே ஆகும்.
(5) அனுராதபுர புனித பூமியில் மகாசேன மன்னனால் நிர்மாணிக்கப்பட்ட வட்டதாகே ஆகும். (.......)



agaram.lk
Scanned with CamScanner

14) இங்கு காட்டப்பட்டுள்ள இந்துக் கோயில்



(1) 13ம் நூற்றாண்டில் பாண்டிய கட்டடக்கலை இயல்புகளுக்கமைய கட்டப்பட்டதாகும்.
(2) 11 ஆம் நூற்றாண்டில் இராஜேந்திர சோழனின் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டதாகும்.
(3) வானவன் மாதேவி என்ற அரசியால் பொலன்னறுவையில் கட்டப்பட்டதாகும்.
(4) சோழர்களின் கட்டடக்கலை இயல்புகளுக்கமைய 12 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாகும்.
(5) கலிங்க மாகனால் கட்டப்பட்ட இந்துக் கோயிலாகும். (.......)

15) இச்சிலை காணப்படுவது



(1) பொலன்னறுவை அலாகன பிரிவெனா வளவினுள் காணப்படுகின்ற சிலையாகும்.
(2) பொலன்னறுவை கல்விகாரையின் சமாதி புத்தர் சிலையாகும்.
(3) பொலன்னறுவை பபலு விகாரைக்கு அண்மையில் அமைந்துள்ள புத்தர் சிலையாகும்.
(4) பொலன்னறுவை வட்டதாகேயில் காணப்படுகின்ற புத்தர் சிலையாகும்.
(5) பொலன்னறுவை லங்காதிலகவுக்கு அண்மையில் காணக்கூடியதான சிலையாகும். (.......)

16) பின்வருவனவற்றுள் எதனைப் பயன்படுத்தி சிந்துவெளி நாகரிகத்தைச் சேர்ந்த கலை ஆக்கங்கள் சில வடிவமைக்கப்பட்டன?

(1) கருங்கல் (2) மரமும் கருங்கல்லும் (3) செம்மணற்கல்
(4) செங்கல் (5) அலபஸ்ரர் கல் (.......)

17) மனித உருவத்தைப் படைப்பதில் கிரேக்க சிற்பிகளின் பிரதான கருத்தாக இருந்தது

(1) முகத்தின் பக்கப் பார்வையையும் கண்களின் முன்பக்கத் தோற்றத்தையும் காண்பித்தல்
(2) பலத்தையும் வெற்றியையும் வெளிப்படுத்தல்
(3) திரிபடைந்த வடிவங்களைப் பயன்படுத்தல்
(4) இலட்சியமான மனிதர் - அழகினையும் பலத்தையும் வெளிப்படுத்துதல்
(5) நெட்டையான விளையாட்டு வீரர்களை வெளிப்படுத்துதல் (.......)

18) ஆன்மீக வசீகரம், உள உரன், உறுதிப்பாடு, நுட்பமான கையாளுகை எனும் பாங்குகளில் குப்தர் காலப் படைப்புத் திறனின் சிறப்பியல்புளைக் கொண்டு விளங்கும் புத்தர்சிலை அமைந்துள்ள இடம்

(1) அவுக்கன
(2) தொலுவில
(3) பொலன்னறுவை வட்டதாகே புத்தசிலை
(4) கம்பளை லங்காதிலக
(5) கல்விகாரை புத்தர்சிலை (.......)

19) றபாயேலினால் ஆக்கப்பட்ட "அதென்ஸ் பாடசாலை" ஓவியம் காணப்படுவது

(1) வத்திக்கானிலுள்ள சிஸ்ரைன் தேவாலயத்தில்
(2) பாரிஸிலுள்ள லூவர் நூதன காட்சியகத்தில்
(3) புனித பீற்றர் தேவாலயத்தில்
(4) புனித மரியா டெலா கிறேஸி துறவி மடத்தில்
(5) வத்திக்கானில் ஸ்ரென்சா டெலாசிக்னா நகராவில் (.......)

agaram.lk



Scanned with CamScanner

20) “கைரோகிளிப்ஸ்” என்னும் சித்திர வடிவ எழுத்துக்களை சித்திரங்களின் பின்னணிக்குப் பயன்படுத்தியவர்கள்

(1) கிரேக்கர்.
(3) இந்தியர்
(3) எகிப்தியர்
(4) உரோமானியர்
(5) பபிலோனியர் (.......)

❖ வினா இல 21 - 25 வரை கீழே தரப்படும் $U, V, W, X, Y$ எனப்படும் நிழற்படங்கள் தொடர்பாக கேட்கப்படும் வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து புள்ளிக் கோட்டில் இடுக.


U


V


W


X


Y

21) எழுத்து $U$ இனால் காட்டப்படுவது

(1) தஞ்சாவூரிலுள்ள ராஜராஜேஸ்வரம் கோயில்
(2) கங்கை கொண்ட சோழபுரம் காணப்படும் கும்பகோணக் கோயில்
(3) மாபல்லபுரத்தில் உள்ள கடற்கரைக் கோயில்
(4) மகாவலிபுரத்தில் உள்ள ரதக் கோயில்
(5) மகாவலிபுரத்தில் உள்ள மகிஷாசுரமர்த்தனி கோயில் (.......)

22) எழுத்து $V$ இனால் காட்டப்படுவது

(1) எகிப்தில் தீபஸ்சிஸ் காணப்படும் எட்பூ தேவஸ்தானம்
(2) விசாலமான தூண்களை அடிப்படையாகக் கொண்டு கட்டப்பட்ட ஒரேயொரு தேவஸ்தானம்
(3) சூரிய தெய்வத்திற்குக் கட்டப்பட்ட லக்சோ தேவாலயம்
(4) ராம்சேஸ் அரசனுக்காகக் கட்டப்பட்ட அபுசிம்பல் தேவாலயம்
(5) ஹோறஸ் தெய்வத்தின் பொருட்டு கட்டப்பட்ட தேவாலயம் (.......)

23) $W$ எழுத்தினால் காட்டப்படும் இயற்கையின் அழகு நிலையை சித்திரிக்கின்ற $H. A.$கருணாரட்னத்தின் சித்திரம்

(1) சிறப்பான வர்ணக் கலப்பினைக் கொண்ட படைப்பாகும்.
(2) இயற்கைச் சூழலை அவதானித்து அப்படியே வரையப்பட்ட படைப்பாகும்.
(3) சந்திரோதயத்தின் மனங்கவர் காட்சி ஓவியமாக்கப்பட்ட சந்தர்ப்பம்
(4) இரவில் வனப் பிரதேசத்தின் அழகைச் சித்திரிக்கின்ற ஓவியம்
(5) பௌர்ணமி தினத்தில் போதிமர மண்டப அழகு சித்திரமாக்கப்பட்ட ஓவியமாகும். (.......)



agaram.lk
Scanned with CamScanner

24) *X* எழுத்தினால் காட்டப்பட்டுள்ள தூண் செதுக்கல் கிடைக்கப் பெற்றது
(1) பொலன்னறுவை ஹெட்டதாகேயிலிருந்து ஆகும்.
(2) மிகிந்தலை கண்டக சைத்தியவிலிருந்து ஆகும்.
(3) பொலன்னறுவை அட்டதாகேயிலிருந்து ஆகும்.
(4) பொலன்னறுவை நிஸ்ஸங்கமல்ல மன்னனின் அரச மாளிகையிலிருந்து ஆகும்.
(5) அனுராதபுர மிரிசவெட்டிய நுழைவாயிலிருந்து ஆகும். (.......)

25) *Y* எழுத்தினால் காட்டப்பட்டுள்ள மல்லவபுர செதுக்கலின் ஒரு பகுதியினால் வெளிப்படுத்தப்படுவது. சிவபெருமான்
(1) தனது பக்தர்களுக்கு அருள்பாலிக்கின்றமை
(2) அர்ச்சுனனின் தவநிலையை ஆராய்கின்றமை
(3) பகீரத முனிவரைக் கடிந்துரைக்கின்றமை
(4) ஆகாய கங்கையை உருவாக்க முனைகின்றமை
(5) பகீரத முனிவரால் ஆகாய கங்கையை உருவாக்கித் தருமாறு கோரிக்கை விடுக்கப்படுகின்றமை. (.......)

26) கிறபிக் சித்திர ஆக்கங்களை மேற்கொள்ளும் ஒரு கலைஞர் மிகக் கவனம் செலுத்த வேண்டியது
(1) பல்வகை எழுத்துக்களை நிர்மாணிப்பதிலாகும்.
(2) தொடர்பாடல் தேவைகளுக்காக புத்தாக்கங்களை மேற்கொள்வதிலாகும்.
(3) பிரசாரப் பணிகளுக்கான சுவரொட்டிகளை நிர்மாணிப்பதிலாகும்.
(4) நூல்களின் மேலட்டைகள், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரங்கள் என்பவற்றை நிர்மாணிப்பதிலாகும்.
(5) வர்த்தக ரீதியான உற்பத்திகளின் முகப்பு அடையாளங்களை (Labels) நிர்மாணிப்பதிலாகும். (.......)

27) சிந்து வெளியில் கண்டெடுக்கப்பட்ட முத்திரைகளிடையே சிவனின் குறியீடாகக் கருதப்படுவது
(1) புலியுடன் போரிடத் தயாராகும் மனிதனைக் காட்டும் முத்திரை
(2) கொம்புடைய கடவுளைக் காட்டும் முத்திரை
(3) நந்தி உரு இடம் பெற்றுள்ள முத்திரை
(4) மர வழிபாட்டைக் காட்டும் முத்திரை
(5) வணங்கும் நிலையில் காணப்படும் ஆண் உருவ முத்திரை (.......)

28) மத்திய கால சிங்களக் கலைநுட்பம் பற்றி ஆய்வு செய்து அதன் அருமை பெருமையை உலகிற்கு வெளிப்படுத்திய தொல்பொருளியலாளரான சிறந்த கல்விமான்
(1) செனரத் பரணவிதான அவர்கள்
(2) ஆனந்த குருகே அவர்கள்
(3) ஆனந்த குமாரசுவாமி அவர்கள்
(4) எச். சீ. பீ. பெல் அவர்கள்
(5) சால்ஸ் கொடகும்புர அவர்கள் (.......)


29) இலங்கை வெளிநாட்டு ஆதிக்கத்தின் கீழிருந்த வேளையில் பௌத்த மறுமலர்ச்சியை ஏற்படுத்த லிதோ அச்சு ஓவியங்களை வெளியிட்டவர்
(1) சோழியஸ் மென்டிஸ்
(2) அமரசேகரா
(3) ஜோர்ச்கீற்
(4) எம். சார்ளிஸ்
(5) சோமபந்து வித்தியாபதி (.......)





Scanned with CamScanner

30) மறுமலர்ச்சி ஓவியங்களில் உலகில் மிகப் பெரிய பிரஸ்கோ சித்திரம் எனக் கருதப்படுவது
(1) மொனாலிசா
(2) ஏதென்ஸ் பாடசாலை
(3) புல்வெளியில் மதிய போசனம்
(4) இறுதித்தீர்ப்பு
(5) இறுதி இராபோசனம் (.......)

❖ 31 - 35 வரை கீழே தரப்படும் $P, Q, R, S, T$ எனப்படும் நிழற்படங்கள் தொடர்பாக கேட்கப்படும் வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து புள்ளிக்கோட்டில் இடுக.


P


Q


R


S


T

31) போதிகர எனும் கட்டடக்கலை வகைக்கு உரிய கட்டடம்
(1) $P$ (2) $Q$ (3) $R$ (4) $S$ (5) $T$ (.......)

32) மேற்படி கட்டடங்களுள் பொலநறுவைக் காலத்திற்குரிய கட்டடத்தொகுதி
(1) $P, Q, R$ (2) $P, Q, S$ (3) $Q, R, T$
(4) $P, Q, T$ (5) $Q, R, S$ (.......)


33) போயா கருமங்கள் நிறைவேற்றப்படும் உபதேசகர கட்டடக்கலை வகைக்குரிய கட்டடம்
(1) $P$ (2) $Q$ (3) $R$ (4) $S$ (5) $T$ (.......)

34) அரிதான பெண் நாகராகினி வடிவத்தைக் கொண்ட கைப்பிடிச் சுவர் (கொரவக்கல்) காணப்படும் கட்டடம்
(1) $S$ (2) $T$ (3) $P$ (4) $Q$ (5) $R$ (.......)

35) $Q$ என்ற கட்டடத்தில் காணப்படும் தூண் வெளிப்படுத்துவது
(1) செயன்முறை அனுபவத்தை கலை உருவாக்கத்தின் பொருட்டு பயன்படுத்திக் கொள்ளும் ஆற்றல்.
(2) புதிய நிருமாணிப்பை உருவாக்கும் விருப்பும் அதனுடன் இணைந்த செயற்பாடும்
(3) அவதானிப்பு, அனுபவம், ஆக்கச் சிறப்பு என்பவற்றின் ஊடாகப் புதுமையானவற்றை உருவாக்கும் ஆற்றல்
(4) பொருத்தமானதை தெரிந்து அதை வெற்றிகரமாக நிருமாணித்துக் கொள்ளும் ஆற்றல்
(5) எதிர்பார்த்த செயலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அலங்கரிப்பு முறையைப் பயன்படுத்திக் கொள்ளும் ஆற்றல் (.......)


agaram.lk
Scanned with CamScanner

❖ வினா இல 36 - 40 வரை கீழே தரப்படும் நிழற்படம் தொடர்பாக கேட்கப்படும் வினாவிற்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து புள்ளிக்கோட்டில் இடுக.



36) இவ் ஓவியத்தின் பகுதியானது எவ்வோவியத்தின் தலைப்புடன் தொடர்புபட்டதாகும்?
(1) ஆதாமைப் படைத்தல்
(2) கடைசி இராப்போசனம்
(3) கடைசித் தீர்ப்பு
(4) புனித பீற்றரை சிலுவையில் அறைதல்
(5) ஆதாம் தேவலோகத்தில் இருந்து விரட்டப்படுதல் (.......)

37) இவ்வோவியம் காணப்படும் இடம்
(1) வத்திக்கான் சிஸ்ரைன் தேவாலய உட்கூரை
(2) வத்திக்கான் சிஸ்ரைன் தேவாலய பலீபீடச் சுவர்
(3) வத்திக்கான் சென் பீற்றர் தேவாலய பலீபீடச் சுவர்
(4) மிலன் சாந்தா மரியா மடலாயச் சுவர்
(5) வத்திக்கான் ஸ்ரென்சா டெலாசிக்னா நகரா சுவர் (.......)

agaram.lk

38) இவ்வோவியத்தில் வரைநுட்ப முறையில் சிறப்பாகக் கருதக்கூடியது
(1) பிரமாண்டமான பிரஸ்கோ சீக்கோ சுவர் ஓவியம்
(2) பிரமாண்டமான பிரஸ்கோ புவனோ சுவர் ஓவியம்
(3) பிரமாண்டமான பிரஸ்கோ சீக்கோ உட்கூரை ஓவியம்
(4) பிரமாண்டமான பிரஸ்கோ புவனோ உட்கூரை ஓவியம்
(5) பிரமாண்டமான இயற்கை வர்ண ஓவியம் (.......)

39) இவ்வோவியத்தில் காணப்படும் மனித உருவங்களின் தனித்துவமான இயல்பாகக் கருதக்கூடியது
(1) இயற்கைப் பண்புமிக்கதாக காணப்படல்
(2) மரபு சம்பிரதாயங்களுக்கமைய வரையப்பட்டுள்ளமை
(3) சிற்ப இலட்சண பண்புகள் உருவங்களில் பிரதிபலிக்கப்பட்டுள்ளமை
(4) கிறீஸ்தவக் கதைகளை உருவங்கள் மூலம் வெளிப்படுத்தியமை
(5) மிகப் பிரமாண்டமான அதிக மனித உருவங்களை வரைந்துள்ளமை (.......)

40) இவ்வோவியத்தில் தளச்சித்தரிப்பின் சிறப்பாகக் கருதக்கூடியது
(1) தளம் முழுவதும் உருவங்களைக் கொண்டு நிரப்பப்பட்டுள்ளது.
(2) அரை வளைவு தன்மை கொண்ட தளப்பரப்பு பயன்படுத்தப்பட்டுள்ளது.
(3) மத்திய தளத்தை மையமாகக் கொண்டு ஓவிய வடிவமைப்பு செய்யப்பட்டுள்ளது.
(4) தேவ உலகம், பூவுலகம், பாவிகளின் உலகம் என மூன்று தளப்பரிமான சித்தரிப்பைக் காட்டியமை
(5) ஓவியம் முழுமையும் கதை மரபை பின்பற்றாது முக்கியமான பகுதிகளுக்கு மாத்திரம் கதை மரபு பயன்படுத்தப்பட்டுள்ளது. (.......)



Scanned with CamScanner

## பகுதி - II

### உப பகுதி 'அ'

### (சித்திரக்கலையின் மதிப்பீடும் இரசனையும் - இலங்கை)

01) அநுராதபுரக்கால ஓவியக்கலையின் ஒரு தொடர்ச்சியாகவே பொலன்னறுவைக்கால ஓவியங்கள் அமைகின்றன.

(i) அநுராதபுரக்கால ஓவியங்கள் வரையப்பட்டுள்ள நான்கு இடங்களைக் குறிப்பிடுக.

(ii) கல்விகாரை வித்தியாதாரக் குகையில் வரையப்பட்டுள்ள ஓவியங்களை சுருக்கமாக மதிப்பிடுக.

(iii) பொலன்னறுவை திவங்காலய ஓவியங்களில் காணக்கூடிய அநுராதபுரப் பண்புகளை உதாரணத்துடன் விமர்சிக்குக.

02) பொலன்னறுவைக்கால சிற்பக் கலையிலும், ஓவியங்களிலும் சோழ கலை மரபு செல்வாக்குச் செலுத்தியுள்ளதை எஞ்சியுள்ள கலைப்படைப்புகள் ஆதாரப்படுத்துகிறது.

(i) பொலன்னறுவைக் காலத்திற்குரிய சோழர்கால இந்துச் சிலைகள் நான்கு தருக.

(ii) பொலன்னறுவை இரண்டாம் சிவாலயத்தின் கலைத்துவப் பண்புகளை சுருக்கமாக மதிப்பிடுக.

(iii) பொலன்னறுவைக்கால பௌத்த ஆலயங்களில் காணக்கூடிய சோழ கலைமரபின் செல்வாக்குகளை உதாரணத்துடன் விமர்சிக்குக.

### உப பகுதி 'ஆ'

### (சித்திரக்கலையின் மதிப்பீடும் இரசனையும் - இந்தியா)

03) இந்திய பௌத்த கலைப் படைப்புகளில் முதிர்ச்சியடைந்த தன்மையினை அமராவதி படைப்புகளில் காணக்கூடியதாக உள்ளது.

(i) இந்தியா புராதன பௌத்த செதுக்கலில் பயன்படுத்தப்பட்ட குறியீடுகள் நான்கு தருக.

(ii) அமராவதி தூபியில் பெரும் பகுதிகள் அழிந்துபோய்விட்டாலும் அமராவதியில் பெறப்பட்ட கற்பலகை செதுக்கல் தூபி பற்றி தரும் தகவல்களை சுருக்கமாக விளக்குக.

(iii) நளகிரி யானையை அடக்குதல் என்ற சிற்பத்தில் காணக்கூடிய சிற்பக்கலையில் ஏற்ப முதிர்ச்சித் தன்மையினை விளக்குக.

04) மதுரா கலைப்பாணியில் தொடர்ச்சியாக குப்தர்கால வேலைப்பாடுகள் அமைந்த போதிலும் மகத்தான படைப்புக்கள் உருவான காலமாக குப்தர் காலத்தைக் கருதலாம்.

(i) மதுரா புத்தர் சிலைகளில் காணக்கூடிய பண்புகள் நான்கு தருக.

(ii) மதுரா புத்த சிலைகளை காட்டிலும் குப்தர் கால புத்தசிலைகளில் காணக்கூடிய சிறப்பான பண்புகளை சுருக்கமாக விளக்குக.

(iii) சாரநாத் புத்தசிலை குப்தர் காலத்தின் மிகச் சிறந்த சிலையாகும். அதன் சிறப்பான பண்புகளை இலங்கை குப்தர்கால புத்த சிலைகளுடன் தொடர்புபடுத்தி மதிப்பிடுக.

### உப பகுதி 'இ'

### (சித்திரக்கலையின் மதிப்பீடும் இரசனையும் - ஐரோப்பா)

05) ஆபிரிக்க பழங்குடிகளின் குடுவைச் சித்திரங்களை விருத்தி செய்ததன் மூலம் பிக்காசோ கனவடிவவாதம் என்ற கலைமரபை உருவாக்கினார்.

(i) பிக்காசோவின் நீலயுகம், இளஞ்சிவப்பு யுக படைப்புகளுக்கு உதாரணம் நான்கு தருக.

(ii) பல்தொகுப்பு கியூபிசம் என்ற எண்ணக்கருவை உதாரணத்துடன் சுருக்கமாக விளக்குக.

(iii) குவர்னிக்கா ஓவியத்தின் கருப்பொருள், ஊடகம், கியூபிச முறை என்பவற்றை மதிப்பீடு செய்க.

06) கிரேக்க கலைஞர்களின் முதிர்ச்சியை அவர்களது கட்டடங்களும் சிற்பங்களும் எடுத்துக் காட்டுகிறது.

(i) கிரேக்க கட்டடங்களில் காணப்படும் மூன்று தூண் அமைப்புக்களைப் பெயரிடுக.

(ii) கிரேக்க மேன்மைக்கால கலைஞர் ஒருவரை குறிப்பிட்டு அவரது படைப்புக்களை மதிப்பிடுக.

(iii) 'லவகூன் சிற்பம் கிரேக்க பொற்கால கலையின் சிறப்பை எடுத்துக் காட்டுகிறது' இக்கூற்றினை விளக்குக.



agaram.lk

Scanned with CamScanner

யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

FWC

# Field Work Centre

# தவணைப் பரீட்சை, மார்ச் - 2016

# Term Examination, March - 2016

| தரம் :- 13 (2016) | சித்திரக்கலை – II | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

அறிவுறுத்தல்கள் :

* உமது சுட்டெண்ணைச் சித்திரம் வரையும் தாளின் மறுபக்கத்தில் தெளிவாக எழுதுக.
* விடைத்தாளைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் கையளிக்கும் போது அது நன்கு உலர்ந்திருத்தல் முக்கியமானது. ஈரமான சித்திரங்கள் ஒன்றுடன் ஒன்று ஒட்டிக் கொள்வதற்குச் சந்தர்ப்பம் உள்ளமையினால், அது உங்களுக்குப் பாதகமானதாக அமையலாம்.

## இயற்கைக் கற்றலும் அசையாப் பொருள்கூட்டமும்

❖ பின்வரும் விடயங்களைக் கவனத்திற் கொண்டு உமக்கு முன்னால் வைக்கப்பட்டுள்ள செடியுடன்கூடிய பொருள் தொகுதியை வரைந்து வர்ணந் தீட்டுக.

* கடதாசிப் பரப்பினைப் பொருத்தமானவாறு பயன்படுத்திச் சித்திர ஒழுங்கமைப்பினைச் செய்க.
* பொருள்களினதும் செடியினதும் இயல்பு, வெளிப்புறத் தன்மை, பரிமாணம், கண்மட்டம், முப்பரிமாண இயல்பு, தூரதரிசனக் கோட்பாடுகள் ஆகியன பற்றிக் கவனத்திற் கொள்க.
* பொருள்தொகுதி உமக்குத் தெரிகின்ற விதத்தில் வரைந்து அதன் மீது ஒளி, இருள் விழுகின்ற தன்மையைக் கவனத்திற் கொண்டு வர்ணந் தீட்டுக.
* வர்ண ஊடகங்களைக் கையாளுகின்ற நுட்பமுறைகளைப் பொருத்தமானவாறு பயன் படுத்துக.
* பொருள்தொகுதி வைக்கப்பட்டுள்ள பலகையின் அளவைப் பொருள் தொகுதிக்குப் பொருத்தமானதாக மாற்றிக் கொள்ள முடியும்.
* நீர் வர்ணம், போஸ்ரர் வர்ணம், தாள் வர்ணம், பஸ்ரல் வர்ணம் அல்லது இவ்வூடகங்களைக் கலந்தும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

agaram.lk



Scanned with CamScanner

யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2016
## Term Examination, March - 2016

| தரம் :- 13 (2016) | சித்திரக்கலை – III | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

கவனிக்க :

* நீங்கள் ஒரு சித்திரத்தை மாத்திரம் வரைய வேண்டும்.
* உங்கள் சுட்டெண்ணையும் உரிய வினா இலக்கத்தையும் விடைத்தாளின் பிற்பக்கத்தில் உள்ள கோட்டில் தெளிவாக எழுதுக.
* விடைத்தாளைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்கும் போது உங்கள் சித்திரம் நன்றாக உலர்ந்திருத்தல் வேண்டும். ஈரமான சித்திரங்கள் ஒன்றோடொன்று ஒட்டிக் கொள்ளுதல் உங்களுக்குப் பிரதிகூலமாக அமையலாம்.
* வர்ணந் தீட்டுவதற்கு நீர்வர்ணம், போஸ்ரர் வர்ணம், பெஸ்ரல் வர்ணம் உட்பட கையில் ஒட்டிக்கொள்ளாத எவ்வகை வர்ண ஊடகத்தையும் பயன்படுத்தலாம். (பெல்ற் பேனையைப் பயன்படுத்துதல் உகந்ததன்று)
* வரைவதற்கு வெள்ளைத் தாளும் தேவையானவர்களுக்குத் திசுத் தாளும் வழங்கப்படும்.

"அ", "ஆ", "இ" பகுதிகளிலிருந்து ஒரு தலைப்பை மாத்திரம் தெரிவு செய்க.

### பகுதி "அ"
### சித்திர ஒழுங்கமைப்பு

01) மர நிழலில் தியானத்தில் ஈடுபட்டிருக்கும் துறவிகள்
02) சரணாலயப் பூமியில் மிருகங்களைப் பார்வையிடுவோர்
03) மீன் பிடித்து எடுத்துவரும் மீனவர்கள் கரைக்கு திரும்புதல்
04) சுவாரசியமாக உரையாடலில் ஈடுபட்டிருக்கும் பெண்கள்

### பகுதி "ஆ"
### அலங்கார ஆக்கம்

05) அலரிப் பூக்களையும் இலைகளையும் விருப்பப்படி ஒழுங்குமுறையில் பயன்படுத்தி சீத்தைத் துணி ஒன்றுக்குப் பொருத்தமான பரவுருப அலங்காரம் ஒன்றை நிர்மாணிக்குக.
06) நவீன பாணியிலான பிராணியொன்றின் வடிவத்தைக் கொண்டு பந்திக் முறையில் வர்ணமிடுவதற்குப் பொருத்தமான $2 \times 3$ அடி அளவிலான சுவர் அலங்காரம் ஒன்றை நிர்மாணிக்குக.
07) சேலை முந்தானைக்குப் பொருத்தமான அலங்காரம் ஒன்றைப் பாரம்பரிய அலங்கரிப்பு அலங்காரங்களிலிருந்து நிர்மாணிக்குக.

### பகுதி "இ"
### கிறபிக் சித்திரம்

08) "நாம் வளர்ப்போம் நாட்டைக் கட்டியெழுப்புவோம்" என்ற தலைப்பில் வர்ண போஸ்ரர் ஒன்றை நிர்மாணிக்குக.
09) பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டி ஒன்றின் போது விநியோகிக்கப்படுகின்ற கையேட்டின் முன் பக்கத்தை அலங்கரிப்பதற்கான கிறபிக் சித்திரமொன்றை நிர்மாணிக்குக.
10) நாட்டின் பிரசித்தி பெற்ற கலைஞர் ஒருவரின் பிறந்தநாள் வாழ்த்துக்கான வாழ்த்துமடல் ஒன்றை நிர்மாணிக்குக.



agaram.lk
Scanned with CamScanner

## நிலைப்பொருட்கூட்ட வரைதல்
(ஒழுங்குபடுத்தப்பட வேண்டிய பொருட்களின் அமைப்பு)



**வைக்கப்பட வேண்டிய பொருட்கள்**

(1) புத்தகம்
(2) சோடாரின்
(3) தூரிகை
(4) வட்டத்தட்டு
(5) சாடி
(6) தாவரக்கிளை



Scanned with CamScanner

யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2016
## Term Examination, March - 2016

| சித்திரக்கலை | புள்ளித்திட்டம் | தரம் :- 13 (2016) |
|---|---|---|

சித்திரக்கலை I - 100 புள்ளிகள்
சித்திரக்கலை II - 100 புள்ளிகள்
சித்திரக்கலை III - 100 புள்ளிகள்

இறுதிப் புள்ளி = $100 + 100 + 100 = 300$

$300 \div 3$

= 100 புள்ளிகள்

சித்திரக்கலை I - பகுதி - I = 40 புள்ளிகள்
பகுதி - II = $20 \times 3 = 60$ புள்ளிகள்

### பகுதி - I

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01) | 3 | 11) | 3 | 21) | 4 | 31) | 3 |
| 02) | 1 | 12) | 2 | 22) | 4 | 32) | 2 |
| 03) | 3 | 13) | 3 | 23) | 2 | 33) | 5 |
| 04) | 4 | 14) | 1 | 24) | 3 | 34) | 1 |
| 05) | 2 | 15) | 4 | 25) | 5 | 35) | 5 |
| 06) | 2 | 16) | 3 | 26) | 2 | 36) | 3 |
| 07) | 3 | 17) | 4 | 27) | 2 | 37) | 2 |
| 08) | 3 | 18) | 2 | 28) | 3 | 38) | 2 |
| 09) | 5 | 19) | 5 | 29) | 4 | 39) | 3 |
| 10) | 3 | 20) | 3 | 30) | 4 | 40) | 4 |

($40 \times 1 = 40$ புள்ளிகள்)

agaram.lk

### பகுதி - II
### உப பகுதி 'அ'

01)
(i) சிகிரியா, வெஸ்ஸகிரிய, மிகுந்தலை, ஹூவான்வெலிசாய, ஹிந்தலாகல (4 புள்ளிகள்)

(ii) கல்விகாரை வித்தியாதாரக் குகையில் நீண்ட காம்புடைய பூவுடன் காணப்படும் வயோதிப உருவம் (பிரம்மா) மற்றும் தேவ வடிவங்கள் பற்றி குறிப்பிடப்படவேண்டும். (4 புள்ளிகள்)

(iii) தெய்வ அழைப்பு, தங்க ஏணி மூலம் சங்கிஸ்தபுரத்திற்கு வருகைதரும் காட்சி என்பன அனுராதபுரக் கால இயல்பைக் காட்டுகிறது.
முப்பரிமான தன்மை, கோடுகள் மற்றும் வர்ணங்களின் இயல்புகள் அனுராதபுர இயல்பைக் காட்டுகிறது.
கோடுகள் சந்தத்துடன் முறித்த ரேகையாக காணப்படுகிறது.
சிவப்பு, செம்மஞ்சள், கபிலம், வெள்ளை ஆகிய வர்ணங்கள் அதிகம் பாவிக்கப்பட்டுள்ளது. (10 புள்ளிகள்)



Scanned with CamScanner

02)

(i) நடராஜர், பார்வதி, விஷ்ணு, சிவன்பார்வதி, திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், விநாயகர்

(4 புள்ளிகள்)

(ii) * சற்சதுர வடிவமானது

* முழுவதும் கருங்கல்லினால் கட்டப்பட்டது.
* சோழ கற்றளி முறைமைக்கு அமைய கட்டப்பட்டது.
* கருவறை, அர்த்த மண்டபம், வெளிவாயில் மண்டபம் என்ற 3 பகுதிகளை கொண்டது.
* கருவறையிலும் சிவலிங்கம் காணப்படுகிறது.
* வெளித்தள்ளிய தூண் அமைப்பு விமான அமைப்பு என்பன காணப்படுகிறது. (6 புள்ளிகள்)

(iii) * தூபராமை ஆலயம், இலங்கைத்திலக ஆலயம், திவங்காலயம் என்பன சோழக்கால மரபிற்கு அமைய அமைக்கப்பட்டதாகும். (அர்த்த மண்டபம்)

* கருவறை, அந்தராளம் (அர்த்த மண்டபம்), வெளிவாயில் ஆகிய பகுதிகளைக் கொண்டது.
* வெளிப்புறச் சுவர்கள் வெளித்தள்ளிய தூண்கள் விமானம் போன்ற அலங்காரம் காணப்படும்.
* சாலபஞ்சிகா (கிஞ்சிகா) முறையிலான மூடிய கூரையமைப்பு
* மேற்குறிப்பிட்ட கட்டடக்கலை மரபுகள் சோழ கட்டடக்கலை மரபை வெளிப்படுத்துகிறது.

(10 புள்ளிகள்)

## உப பகுதி 'ஆ'

03)

(i) பாதம், அரசமரம், சிம்மாசனம், தர்மச்சக்கரம், குடை (4 புள்ளிகள்)

(ii) * அமராவதி தூபி பற்றிய விபரத்தை தருகிறது.

* இதனை அடிப்படையாக கொண்டு சாஞ்சி பாருத் தூபிகளை விட அழகானது
* நீர்குமிழி வடிவத்தில் இருந்து வேறுபட்டது.
* தூபியின் மேற்பரப்பில் செதுக்கல்கள் கொண்ட கற்பலகை ஒட்டப்பட்டிருந்தது.
* "ஆரியகத்தம்ப" என்ற சதுரவடிவமான (தோரணத்திற்கு பதிலாக) வாயில் அமைப்பு காணப்பட்டது.

(6 புள்ளிகள்)

agaram.lk

(iii) * தேவதத்தன் என்ற மன்னன் புத்தரை கொல்லும் பொருட்டு அனுப்பப்பட்ட மதம் பிடித்த யானை மக்கள் மத்தியில் கலகம் செய்வதும், புத்தரை கண்டதும் வீழ்ந்து வணங்குவதும் சிற்பமாக காட்டப்பட்டுள்ளது.

* வட்டவடிவமான தளத்தில் செதுக்கப்பட்டுள்ளது.
* பயம், மகிழ்ச்சி, கருணை போன்ற தன்மைகள் காட்டப்பட்டுள்ளது.
* மனித வடிவங்களில் உணர்வு வெளிப்பாடு சிறப்பாக காட்டப்பட்டுள்ளது.
* புத்தர் உருவமாக காட்டப்பட்டுள்ளது.
* அக்கால கோட்டை கொத்தளங்கள் காட்டப்பட்டுள்ளது.
* ஆடை ஆபரண வேலைப்பாடுகள் சிறப்பாக காட்டப்பட்டுள்ளது. (10 புள்ளிகள்)

04)

(i) * மகா புருஷ இலட்சணங்கள் காட்டப்படல்

* உடலோடு ஒட்டிய வரிவடிவ ஆடையமைப்பு (உள்ளாடை காட்டப்படல்)
* புத்தரின் தலைக்கு பின்புறமாக அழகிய ஒளிவட்டம்
* சாக்கிய சிங்கமாக காட்ட சிங்க உருவம் பயன்படுத்தப்படல்.
* கண்கள் பாதி திறந்திருத்தல் (4 புள்ளிகள்)



Scanned with CamScanner

(ii) ✱ குப்தர்கால புத்தசிலைகளில் காணப்படும் சிறப்பான அம்சங்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

✱ உடலோடு ஒட்டிய வரிவடிவமற்ற ஆடையமைப்பு

✱ வட்டவடிவமான உடலமைப்பு

✱ உயரிய ஆத்மீக பண்புகள் வெளிப்படுத்தப்படல் (6 புள்ளிகள்)

(iii) ✱ தர்ம உபதேச முத்திரையை வெளிப்படுத்தும் நிலையில் ஸாரநாத் புத்தசிலை காணப்படுகிறது.

✱ இலங்கையில் பழைய புத்தசிலைகளில் இம் முத்திரையை காட்டும் புத்தசிலைகள் இல்லை

✱ அனுராதபுரக்காலத்திற்குரிய மகாமேகவன புத்தசிலை, தொழுவிலா புத்தசிலை என்பன குப்தர் காலத்திற்குரியதாகும்.

✱ ஸாரநாத் புத்தசிலை பத்மாசன நிலையிலும் இலங்கையில் உள்ள புத்தசிலைகள் வீராசன நிலையிலும் காணப்படுகிறது.

✱ இலங்கையில் உள்ள புத்தசிலைகளும் ஸாரநாத் புத்தசிலை போன்று வரிவடிவமற்ற ஆடையமைப்பைக் கொண்டுள்ளது.

✱ ஸாரநாத் புத்தசிலையில் தலைக்கு பின்புறம் அலங்கார ஒளிவட்டமும் தேவதை வடிவமும் காணப்படுகிறது. (10 புள்ளிகள்)

## உப பகுதி 'இ'

05)

(i) ✱ கோமாளியின் மரணம்

✱ பெண்ணும் காகமும்

✱ நாடோயின் குடும்பமும் குரங்கும்

✱ நோயுற்ற குழந்தையும் தாயும்

✱ இரு சகோதரியின் சந்திப்பு (4 புள்ளிகள்)

(வேறு பொருத்தமான விடைக்குப் புள்ளி வழங்கவும்)

(ii) ஒரு பொருளின் பல்வேறு கோணப் பார்வை வடிவங்களை ஒரு பொருளில் தொகுத்துக் காட்டுதல் பல்தொகுப்பு கியூபிசம் ஆகும்.

அவிக்னோளின் யுவதிகள் என்ற சித்திரம் இதற்கு சிறந்த உதாரணமாகும்.

இதில் காணப்படும் மூன்றாவது பெண்வடிவத்தில் முகம் நேர் பார்வையில் காணப்பட்டாலும் மூக்கு பக்க பார்வையில் காணப்படுகிறது. (6 புள்ளிகள்)

(iii) குவர்ணிக்கா ஓவியம் கொலாச் ஊடக முறையில் பகுப்பாய்வு கியூபிச முறையில் வரையப்பட்டதாகும். (10 புள்ளிகள்)

(இச்சித்திரம் பற்றி குறிப்பிட வேண்டும்)

06)

(i) டொறிக், அயோனிக், கொறித்தியன் (3 புள்ளிகள்)

(ii) பிடியாஸ், பொலிக்டஸ், பிராக்டிலஸ், லிசிபஸ், மையிரன் (7 புள்ளிகள்)

(இவர்களில் ஒருவரது படைப்புக்கள் பற்றி குறிப்பிட வேண்டும்)

(iii) ஹெலனின் காலத்தில் உருவாக்கப்பட்ட சிற்பம் தந்தையும் மகளும் கடற்பாம்பின் பிடியில் சிக்கியுள்ள தன்மை காட்டப்பட்டுள்ளது.

பயம் வேதனை உணர்வுகள் காட்டப்பட்டுள்ளது.

நாடகப் பாங்கான இயல்பை வெளிப்படுத்துகிறது.

"றோஜன்" பூசகர் தொடர்பான கிரேக்க புராணச் சம்பவத்தை வெளிப்படுத்திக் காட்டுகிறது. (10 புள்ளிகள்)



agaram.lk
Scanned with CamScanner